7. அரசினர் தனித் தீர்மானங்கள்.

(அ) மின் வாரியத்திற்கு இருக்கக்கூடிய கடன்வரம்பு.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1948 ஆம் ஆண்டு மின்சாரம் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 65-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒரு சமயத்தில் கடனாக ஆயிரம் கோடி ரூபாய் இருக்கலாமென்று மேற்படி சட்டத்தின் அதே பிரிவைச் சேர்ந்த (3)-வது உட்பிரிவின்படி முடிவு செய்யும் மாநில அரசின் செயற்குறிப்பு ஏற்கப்படலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்ட விதிகளுக்குத் திருத்தம்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன் :

"1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) IV ஆம் இணைப்புப் பட்டியலின் பாகம் I-A] பாகம் V மற்றும் பாகம் VI ஆகியவற்றைத் திருத்தி மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 347 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ், தமிழ்நாடு ஆளுநரால் செய்யப்படவிருக்கின்ற பின்வரும் குறிப்பிட்ட சில திருத்தங்களின் வரைவுக்கு மேற்சொல்லப்பட்ட 347 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவால் கோரப்படுகின்றவாறு ஒப்புதலளிக்கலாம்."

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS